தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.1 நாள் 26.03.2026

| SC. No. | 34/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | லதா மகேஷ்வரி | க/பெ. | மோகன் |
| வயது | 50 | தொழில் | |
| கிராமம் | மாப்படுகை | தாலுக்கா | மயிலாடுதுறை. |

**(1, 4, 6, 7, 8, 10, 11, 12, 13 எதிரிகள் ஆஜர், 2, 3, 5ம் எதிரிகள் ஆஜர் இல்லை. பி.என்.எஸ்.எஸ். சட்டப்பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் மாப்படுகையில் வசித்து வருகிறேன். நான் குற்றவியல் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறையில் 2016 ஆம் வருடம் வழக்கறிஞர் மூலமாக தனிப்புகார் தாக்கல் செய்தேன். 28.06.2015– அன்று மாப்படுகையில் உள்ள கூரை வீட்டை எதிரிகள் வீட்டை இடித்து சேதப்படுத்தியதாக சொல்லி தனிப்புகார் தாக்கல் செய்தேன். நான் கொலை குற்ற வழக்கில் நான், எனது கணவர், எனது மகன்கள் சபரிராஜன், ராஜ்குமார் ஆகியோர் 27.06.2015 அன்று மயிலாடுதுறை போலீசாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, Remand செய்யப்பட்டோம். பின்பு, இரண்டு நாட்கள் கழித்து எனது அம்மா திருச்சி மத்திய சிறையில் இருந்த என்னை பார்த்து எங்களது மாப்படுகையில் இருந்து கூரை வீட்டை சிவப்பிரகாசம், பாஸ்கர், சந்திரசேகர் மற்றும் அவர்களது உறவினர்கள் எங்கள் வீட்டை சேதப்படுத்தி எங்கள் வீட்டிலிருந்த பொருட்களை உடைத்தும், சில பொருட்களை திருடி சென்றதாக என்னிடம் சொன்னார். பின்பு, கொள்ளையில் இருந்த மரத்தை வெட்டியதாகவும், எனது பிள்ளைகளின் சான்றிதழ்களையும் கொலுத்திவிட்டதாகவும், உடனடியாக எனது அம்மா மயிலாடுதுறை காவல் நிலையத்தில் மேற்படி சேதம் குறித்து புகார்

CJM, MAYILADUTHURAI.

M. லதா மகேஸ்வரி

கொடுத்தாக என்னிடம் சொன்னார். பின்பு, 15 நாட்கள் கழித்து bail கிடைத்து நான் வந்துவிட்டேன். பின்பு, போலீசார் எனது அம்மா கொடுத்த புகாரை மேற்கொண்டு விசாரிக்காமல் இருந்ததால் நான் தனிப்புகார் ஒன்று வழக்கறிஞர் மூலமாக குற்றவியல் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறையில் தாக்கல் செய்தேன். இன்றைய தேதிவரை எனது அம்மா கொடுத்த புகார் போலீசாரால் குற்ற எண். 427/2015, பிரிவு 3(1) of TNPPDL Act ஆக வழக்கு பதிவுசெய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை இன்றைய தேதிவரை எந்த விசாரணையும் செய்யாமல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சேதப்படுத்தியதாக சொல்லும் வீட்டில் எனது இளைய மகன் விமல்ராஜ் வசித்து வந்தான். சம்பவம் நடக்கும்போது அவன் பக்கத்து உறவினர் வீட்டில் இருந்தான். எனது மகன் ஜன்னல் வழியாக நடந்த சம்பவத்தை பார்த்தான். நான் வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது வீட்டிலிருந்த வீட்டு உபயோகப்பொருட்கள், கார், மோட்டார் சைக்கிள், இரும்பு பீரோ, கட்டில், டீவி, சைக்கிள்கள் ஆகியவை சேதமாகிருந்தது, மேலும், பீரோவில் வைக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பணம் களவு செய்தும், சுமார் ரூ.29,53,500/– சேதம் ஏற்படுத்தியதாக தெரியவந்தது. பின்பு, போலீசார் இது குறித்து எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததால் நான் தனிப்புகார் கொடுத்தேன். அந்த தனிப்புகார் **அ.சா.ஆ. 1** ஆகும்.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

M.லதாமகேஸ்வரி

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.